செ.வெ.எண்-22 நாள்-12.02.2018

**அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பள்ளி மாணவ, மாணவியர்கள் கல்வி களப்பணிக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்தனர்.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கல்வி களப்பணிகளாக குழவடையான் கோகிலாம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த 9-ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் குறித்தும் அறிந்து கொள்வதற்காக இன்று (12.02.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்களை நேரில் சந்தித்தனர்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்திற்குட்பட்ட குழவடையான் கோகிலாம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 9-ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்வாகம் மற்றும் பொறுப்புகள் பற்றியும் பல்துறைகளைச் சார்ந்த அலுவலர்களின் பணிகள் மற்றும் கடமைகளையும், துறை வாரியாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் பள்ளி மாணவ, மாணவியர்கள் கேட்டறிந்தார்கள்.

பின்னர், மாணவ, மாணவியர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் துறைச்சார்ந்த பணிகள் குறித்தும், சந்தேகங்களுக்கும் விரிவாக மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள். இதனை பள்ளி மாவண, மாணவியர்கள் ஆர்வமுடன் கேட்டறிந்தார்கள்.

இதுபோன்ற கல்வி களப்பணிகள் எங்களுக்கு பயனுள்ளதாகவும், துறைகள் வாரியாக செயல்படும் அலுவலர்கள் பற்றியும் தெரிந்துகொள்ள முடிந்தது. குறிப்பாக, எங்களுடைய ஒவ்வொரு கேள்விக்கும் இன்முகத்தோடு கலந்துரையாடிய மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்களுக்கு குழவடையான் கோகிலாம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 9-ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் நன்றி தெரிவித்தனர்.

இக்கல்வி களப்பணியில், பள்ளி நிர்வாக இயக்குநர் எ.சுயம் பிரகாஷ், மெட்ரிக் பள்ளி முதல்வர் பி.எ.சிவராமகிருஷ்ணா, CBSE பள்ளி முதல்வர் கே.புவனேஷ்வரி, ஆசிரிய, ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**